உ

சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம் 1 | 1905௵ ஜூலை௴ | நம்பர் 7.

சரீரதத்துவ விளக்கம்.

அத்தியாயம் 1. எலும்புக்கூடு.

தேகத்தில் அநேகவிதமான உறுப்புகள் உண்டு என்று சொன்னோமல்லவா? அவைகளை யெல்லாம் தாங்கி நின்று அவை இடம் பெயராமல் காத்துச் சரீரமுழுவதிற்கும் உறுதியைத் தருவது யாது என்று கவனிப்போமானால் அது எலும்புக்கூடு என்று விளங்கும். அவ்வெலும்புக் கூட்டைப்பார்த்தால் சற்று பயங்கரமாகவேயிருக்கும். பார்வைக்கு மிகு சுந்தரமாயிருக்கும் மேனியின் பளபளப்பு அதில் காணப்படுவதில்லை. கரடு முரடான பல எலும்புகளும் அவைகளொன்று சேர்ந்து உண்டாகும் அவயவங்களுமே காணப்படுகின்றன.



(படம் 1—எலும்புக்கூடு)

எலும்புக்கூட்டை நாலு பாகங்களாய்ப் பிரிக்கலாம். அவை யாவை யெனில்:—

I. கழுத்து, முண்டம் என்பவைகளின் எலும்புகள். இதில் அடங்கினவை பின்வருமாறு: i. முள்ளெலும்பு (முதுகுத்தண்டு) ii. விலாவெலும்பு iii. மார்பெலும்பு iv. நெஞ்செலும்பு—வளையம் v. அடிவயிற்று—வளையம்.

II. தலையெலும்பு (முகவெலும்பு உள்பட)

III. கையெலும்பு.
IV. காலெலும்பு.

(படம் 2—முதுகுத்தண்டு)

முண்டத்திற்கு வலிமையுண்டாக்குவது முதுகுத்தண்டு. அது முப்பத்துமூன்று சிறு வெலும்புகளால் ஆக்கப்பட்டது. இவை ஒன்றின்மேலொன்றாய் அமைக்கப்பட்டிருக்கும். இவ் வெலும்புத்தொடரை 5 பாகமாய்ப் பிரிக்கலாம்:—

(1) கழுத்துப்பாகம், ஏழு எலும்புகள் கொண்டது. (2) முதுகுவர்க்கம்; பன்னிரண்டு எலும்புகள் அடங்கியது. (3)

இடுப்புவர்க்கம், ஐந்து எலும்புகள் அடங்கியது. (4) (குண்டி.) அடியெலும்பு ஐந்து எலும்புகள் ஒன்றாய் வகுத்துள்ளது. (5) கடைமுள்ளு, பின்னமாயிருக்கும் நான்கு சிற்றெலும்புகள் சேர்ந்த ஒரு எலும்பு.

சாதாரணமாகச் சொல்லுமிடத்து முதுகெலும்புகளெல்லாம் ஒருமாதிரி என்றே சொல்லலாம். முதுகுவர்க்கத்திலுள்ள ஒரு எலும்பையே மாதிரியாக எடுத்துக்கொள்ளுவோம். அதின் உருவம் பின்வருமாறு:—



(படம் 3—ஓர் முதுகெலும்பு, பக்கப்பார்வை)

சற்றேறக்குறைய ஒன்றரை அங்குலங் குறுக்களவுள்ளதாய் ஒரு அங்குலம் கனமுள்ள வட்டமான பாகம் ஒன்று. இதற்கு உடல் என்று பேர். இதன் பின்பக்கத்தில் அதாவது முதுகுப்புறத்தில் ஒரு வளையம் பொருந்தியிருக்கும். இவ்வளையத்தின் இருபுறங்களிலும் பின்பக்கத்திலுமிருந்து பக்கத்துக்கொன்றாக மூன்று முள்ளுகள் நீட்டிக்கொண்டிருக்கும். இவற்றிற்கு முறையே குறுக்குமுள், பின்முள் என்று பெயர். இந்த எலும்பு ஒன்றன்மேலொன்றாயிருக்குமென்றோமே. ஒரு உடலுக்கும் மற்றொரு உடலுக்கும் இடைவெளியை அடைத்து இரு வெலும்புகளையும் பொருத்துவதற்கு நார்த்தசை காலங்குலமுள்ளதாய் அவற்றின் நடுவே சேர்ந்திருக்கும். இத்தசைத் துண்டுகளுக்கு இடைச்சல்லிகள் என்று பெயர். எலும்புகளைக் கட்டுவதன்றி அவை ஒன்றன் மேலொன்று உரைந்து கொள்ளாதபடியும் இவை செய்கின்றன. ஒவ்வொரு எலும்பிலுள்ள வளையமும் தனக்கு மேலுங் கீழுமாய் வைத்துள்ள இரண்டு வளையங்களையுந் தொடும். ஒவ்வொன்றையும் இரண்டுபக்கங்களில் தொடுகின்றது. இந்தப்படி படுமிடங்களில் தசைகள் இவற்றைக் கட்டிக்கொண்டு

பின்னலாய்த் தொடர்ந்திருக்கும். இது மாத்திரமேயல்ல. உடலின் முன்பின் இருபக்கத்திலும் தசை நார்கள் பின்னிக்கொண்டிருக்கும். ஆகையால் அழுத்தமாய்ச் சற்றே வளையக்கூடியதாயுள்ள தொடராகவும் இந்த முதுகுத்தண்டு அமைந்திருக்கின்றது.

வளையங்கள் ஒன்றின்மேலொன்றாயிருப்பதினால் அவை ஒரு நீண்ட குழாய் ஆகின்றன. இதின் வழியாய்த்தான் நரம்புக்கொடி (கசேருலதை) spinal chord செல்லும். உடல்களெல்லாம் முண்டத்தைக்காக்கும் தண்டாகின்றன. அவற்றோடு பொருந்திய வளையங்களெல்லாம் நரம்பைக்காக்கும் ஒரு பெட்டிபோலாகின்றன.

இந்த முள்ளந்தண்டு நேராக இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. கழுத்தில் முன்னும் முதுகில் பின்னும் இடுப்பில் முன்னும் பிறகு அடிப்பாகத்தில் பின்னுமாய் வளைந்திருக்கும். இப்படியிருப்பதினால் தான் முன்பின் சற்றே முதுகை வளைக்கலாம். அன்றியும் அழகும் இலகுவான சலனமும் உண்டாகின்றன. முதுகு வலமிடமாகவும் வளையும். உடம்பை முறுக்கிக்கொள்ளவுங்கூடும்.

கழுத்தெலும்பின் முதலெலும்புக்கு அட்லாஸ் (Atlas) என்று பெயர். இது மற்ற எலும்புகளைப் போன்றதன்று. இதற்கு உடல் இல்லை. இது வளையமாகவே இருக்கும். இரண்டாவது எலும்பும் விசித்திர உருவம் கொண்டது. இதற்கு ஸ்தம்பம் (Axis) என்று பெயர். இதன் உடலிலிருந்து செங்குத்தாய் ஒரு முள்ளு கிளம்புகின்றது. இந்த முள் ஓடோண்டாய்டு (Odontoid) என்று பெயர் கொள்ளும்.



(படம் 4—அட்லாஸின் உச்சிப்புறம்)



(படம் 5—ஆக்ஸிஸின் முன்புறம்)

இதின் வழுவழுப்புள்ள உச்சியில் அட்லாவின் உட்புறத்து முன்பாகம் பொருந்தும். ஆகையின், அட்லாஸ் ஸ்தம்பத்தின் பேரில் ஓடோண்டாய்டை ஆதாரமாகக் கொண்டு வெகு தூரம் சுற்றலாம். ஸ்தம்பத்தை ஒரே இடத்தில் நிறுத்தத் தசை நாரானது உபயோகப்படுகின்றது. அதுவும் அன்றி, வளையத்தின் வழியாய்ச் செல்லும் நரம்புக்கொடியை முள்ளில் படாமல் விலக்குகின்றது. மற்றைய எலும்புகளைப்போலவே அட்லாஸ் ஆக்ஸிஸ் மேற்பொருந்த இரண்டு இடங்களுண்டு. இவ்விடத் தமைத்துள்ள கட்டுக்களின் தளர்ச்சியே அட்லாவை அவ்வளவு தூரம் அசைக்கக்கூடும்படி செய்கின்றது. அட்லாவின் மேற்புறத்திருக்கும் இரண்டு மிருதுவான இடங்களில் தலைக்கூடு பொருந்தும். இந்தக்கீல்களினால் தான் தலையை முன்பின் அசைக்கக்கூடும். தலையை முன்பின் அசைக்கும்போது அட்லாவை அசையாமல் நிறுத்தி இதன்பேரில் தலைக்கூட்டை அசைக்கிறோம். வலமிடமாய்த் திரும்பும் போது அட்லாஸும் தலையோடு திரும்பும். ஆதாரம் ஆக்ஸிஸினுள்ள ஸ்தம்பமே. ஸ்தம்பத்திலிருந்து தலைக்கூட்டுக்குச் செல்லும் இரண்டு கட்டுகளுமுண்டு. இவற்றால் தான் தலையை முற்றிலும் பின்புறமாய்த்திருப்ப முடியாது. தலையை வலமிடமாகச் சாய்க்கும்போது கழுத்துவர்க்கத்து எலும்பு எல்லாமே சாயும்.

அடிமெலும்பு என்பது ஐந்து எலும்பால் ஆக்கப்பட்டது என்றோமே, அது ஆப்புப்போன்றது. அகண்டபாகம் மேலும் கூர்மையான பாகங் கீழுமாய் அமைந்திருக்கும். இடுப்பெலும்புகளில் கடைசி எலும்பின் உடலோடு நேர் கீழ்ப் புறத்திலும் அதனோடு இருபுறத்திலும் முறையே இடைச்சல்லியாலும் தசை நாரினாலும் கட்டுப்பட்டுளது. இதனடியில் தான் கடைமுள்ளெலும்பொட்டியிருக்கும்.

கடை முள்ளுகளின் எண்ணிக்கை நான்கு. அவைகளில் முதலானது ஆப்பினது கூரிய முனையில் பொருந்தியிருக்கும். ஆனால், வயது சென்ற காலத்தில் இந்த நான்கும் ஒன்றாகிவிடும். விலங்கினத்தில் வாலின் அடிப்புறத்திலிருக்கும் வாலெலும்புகளின் சேடம் இதுவென்று சொல்லுகிறார்கள்,

(இன்னும் வரும்)

T. K. கோபாலராவ்.

ஆயுள்விருத்தி நூல்.

(106-ம் பக்கத்தொடர்ச்சி.)

இது மாத்திரமல்ல; இன்னம் ஜீவவர்க்கத்திலெடுத்துச் சொல்லுவோமானால் டாக்டர் ஜீயார்ஜ் பார்டைஸ் (Dr. George Fordyce) சொல்லியிருப்பதே தகுந்த சாட்சியாகும். அவர் சொல்லுகிறதாவது, ஜப்பான் தேசத்திலுள்ள நீர்வாழ்வனவாகிய கோல்டு பிஷ் (Gold fish) என்னும் மீன்களைச் சுத்த ஜலம் நிறைந்த ஓர் பாத்திரத்திலடைத்து வைத்து, 24-மணி நேரத்திற்கொருதரம் முன்பு பாத்திரத்தில் ஊற்றப்பட்டிருந்த ஜலத்தை மாற்றி அதற்குப் பிரதியாக, வழக்கம்போல் சத்துக்கள் ஜாக்கிரதையாக நீக்கப்பட்ட ஜலத்தைப் பாத்திரத்தில் ஊற்றி வந்ததாகவும், பிறகு மூன்று நாளைக் கொருமுறை அவ்விதமாகவே செய்து வந்ததாகவும், 15 மாதங்கள் வரையில் இவ்வண்ணமே ஆகாரமன்னியில் அந்த மீன்கள் அந்த ஜலம் நிறைந்த பாத்திரத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அவ்வளவு காலமும் அவைகள் சுகஜீவிகளாய் வாழ்ந்தனவென்றும், இன்னம் ஆச்சரியப்படத்தக்க விதமாக அவைகள் ரூபத்தில் பருமனாயிருந்தனவென்றும் தெரிவிக்கிறார்.

இன்னொரு உதாரணமுண்டு, அது பின்வருமாறு:—ஓர் பிராஞ்சு ஆபீஸர் நீண்டகாலமாகக் கொடிய வியாதியாற் பீடிக்கப்பட்டதின் பேரில் சித்தப்பிரமையுண்டாகி ஆகாரத்தை யுட்கொள்ளாமல் தற்கொலை செய்து கொள்ளுவதாய்த்

தீர்மானித்தான். அவன் இந்தத்திடமுள்ள தீர்மானத் தோடும் 46 தினங்கள் வரையில் யாதொருவிதமான ஆகார மன்னியில் இருந்தான். ஐந்தாநாள் அவன் சத்துக்கள் நீக்கப்பட்ட ஜலம் கொஞ்சம் கேட்டான். அவனுக்கு அவ்விதமான ஜலத்தில் அரைப் பயிண்டு அளவு கொடுக்கப்பட்டது. அதை மூன்று நாள் வரையில் சாப்பிட்டான். தன்னுடைய சிநேகிதர்கள் அந்த ஜலம் ஜாஸ்தியான அளவென்று சொல்லியபோது மூன்று துளிவீதம் அரைப் பயிண்டு ஜலத்தை 39 தினங்கள் வரையில் சாப்பிட்டான். அதன்பிறகு 8 நாள் வரையிலும் ஒன்றும் சாப்பிடாமலே இருந்தான். இப்படியிருந்து வந்ததில் தேகம் அசக்தப்பட்டும் பாயும் படுக்கையுமாயிருந்ததைத் தவிர மற்றெந்த விஷயத்திலும் சரியான புத்தியுடையவனுயிருந்ததாகத் தெரிகிறது. பிறகு (Nature's cure) "இயற்கையே வியாதியை சொஸ்தப்படுத்தும்" என்னும் கொள்கைக் கிணங்க ஓர் குழந்தை ரொட்டியும் வெண்ணெய்யும் கொண்டுவந்த சமயத்தில் அவனுக்குப் பசியுண்டாயிற்று உடனே சத்துள்ள ஆகாரங்கள் கொடுக்கப்பட்டதின் பேரில் திரும்பவும் அவன் பலத்தையடைந்தானென்றும், ஆனல் தண்ணீரை மாத்திரம் உட்கொண்டிருந்த காலத்தில் அவனுக்குப் புத்தி சரிவர இருந்ததென்றும், ஆகாரம் சாப்பிட்ட பிறகு புத்தி தடுமாற்றமடைந்ததென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு வரையில் யதார்த்தமென்பது நமக்குத் தெளிவாய்ப் புலப்படாத போதிலும், ஜலத்தில் உள்ள பிராணவாயுவைக் (oxygen) கொண்டே பிராணிகள் நீண்ட காலம் ஜீவிக்கக்கூடுமென்பதைத் தெளிவாய்த் தெரியக்காட்டுகிறது.

9. ஜீவசக்தியைப் பலஹீனப்படுத்தவும் குறைவுப்படுத்தவும் இன்னொரு காரணம் உண்டு. அதாவது, பலத்தை முயற்சியின் மூலமாய் வெளிப்படுத்துவதால் உண்டாகிற நஷ்டம் ஒவ்வொரு முயற்சியினுலும் கொஞ்சம் கொஞ்சமாய் நேருகிறது. இந்த முயற்சிகள் பலமாகவும் இடைவிடாமலும் செய்யப்பட்டால் கடைசியில் ஜீவசக்தி முழுவதும் செலவாகிப் பிராணஹானி சம்பவிக்கும். இதற்கு அநுபவமாக நாம் உலாவுதல், ஒரு வஸ்துவைப்பற்றி நீண்ட காலம் சிந்தனை செய்தல் ஆகிய இவைகளில் பிரவர்த்தித்த பிறகு மிகுந்த

களைப்படைவதைக் காணுகிறோம். மேலும் கால்வினி (Galvini) என்பவர் செய்த பரீட்சையினால் இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அவர், ஒரு பிராணி மரித்த பிறகு ஜீவத்தன்மை இழக்காத அவைகளின் தசைகளையும் நரம்புகளையும் உலோகத்தின் பிரயோகத்தால் உயிருள்ளன போல் நடிக்கும்படி (irritation) செய்தார். சிலர் சரீரம் மரித்த பிறகு தசை நரம்புகளுக்குக் கொஞ்சகாலம் உயிரிருத்தல் கூடுமோ வென்று சங்கிக்கக்கூடும். பிராணிதர்ம குணவித்தை (Physiology) என்னும் சாஸ்திரத்தில் சரீர இறப்பு (Death of the body) முன்னும் தசைகளின் மரிப்பு (Death of the tissues) பின்னும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அத்தாட்சியாக, ஆடு முதலிய பிராணிகளைப் புசிப்பதற்குத் தலைகளை அறுக்கப்பட்ட பிறகு கொஞ்ச நேரம் (சுமார் 5 நிமிஷம் வரையில்) உடல் அசைவற்றிருந்து பிறகு கால் முதலிய அவயவங்களை அசைக்கவும், அவைகளின் தசைகள் துண்டு துண்டாய்ச் சேதிக்கப்பட்ட பின்பும் அந்தத் தசைத் துண்டுகள் உயிருள்ளவைகளைப் போல் சலனஞ் செய்யவும் நான் கண்டிருக்கிறேன். மேற் சொல்லிய வண்ணம் உலோகம் முதலியவற்றின் முயற்சியால் அவைகளுக்குச் சலனம் செய்விக்கப்பட்ட (irritation) காலத்தில் அந்தப் பிரயோகமானது தீவிரமாய் அடிக்கடி செய்யப்படும் பட்சத்தில் சீக்கிரத்தில் அந்த சக்தி ஓய்ந்துவிடும். நிறுத்தி மெதுவாகச் செய்யப்பட்டால் வெகுகாலம் அந்த சக்தியானது நீடித்து நிற்கும். இப்படிச் செய்துவருவதில் சக்தி ஓய்ந்து விட்டதாகத் தெரிந்தபோதிலும், கொஞ்சநேரம் சென்று திரும்பவும் அந்த மாதிரியே செய்யும் பட்சத்தில் மீண்டும் அவைகள் சேஷ்டிக்க ஆரம்பிக்கும். இந்த உதாரணத்தைக் கொண்டு ஜீவசக்தி பலப்படுவதற்கு ஓய்ச்சல் அல்லது அமைதி (Rest) அவசியமாய் வேண்டியிருக்கிறதென்பதை நாம் தெரிகிறோமல்லவா ?

10. ஜீவசக்தியின் தீவிரத் தொழிலானது, யாதாமொரு வஸ்து தன்னைச் சம்பந்தித்த காலத்தில், உடனே அந்த சக்தியும் பிரதிபலனாகத் தானும் அதை எதிர்தாக்குதலினாலும் (Reaction) சரீரத்திற்கு எந்த வஸ்துவாவது சேர்க்கப்பட்ட காலத்தில் சரீரக் கட்டினுடைய ஒழுங்கின்படி அவைகளைச் சரீர ரூபத்தையும் அமைவையும் அடையும்படி செய்கிறது.

11. ஜீவசக்தியானது ஜீவத்தன்மையுள்ள வஸ்துக்களின் அங்கங்களிலெல்லாம் (ஜலமயமாயிருந்தாலும் சரி, கட்டித் தன்மையாயிருந்தாலும் சரி) முழுவதும் நிறைந்திருக்கிறது. ஆனால் அங்கத்தின் பிரிவினைக்குத் தகுந்தபடி அது வெளியிற் காண்பிக்கிறது. எப்படியெனில், நரம்பு அல்லது தாதுக்களில் உணர்ச்சியாகவும், தசை அல்லது பேசிகளில் கோபமூட்டுகை (irritablity) முதலிய குணங்களாயும், வெளியிற் காண்பிக்கிறது. இந்த விதமாக யாவர்க்கும் தெரியும் விதமாய் ஒரு வஸ்துவானது முழு விருத்தியையும் அடையவேண்டிய வரையில் ஜீவசக்தியானது வெளிமுகமாய்த் தோற்றப்படுகிறது. இதைத் தான் வளர்ச்சி (Growth) யென்று சொல்லுகிறோம். ஆனால் இது இம்மட்டோடும் நின்று போகிறதில்லை. முன்பு வளர்ச்சிக்கு வேண்டுவதாயிருந்த சக்தியானது பின்பு நாளாவர்த்தியில் நசித்துப் போகிற தசைகள் முதலிய அங்கங்களைப் புதுப்பித்தலுக்கு (Renovation) உபயோகப்படுகிறது. இந்தப் புதுப்பித்தலே ஜீவனுக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறது. இது வரையில் ஜீவசக்தியின் தன்மையைப்பற்றியும் ஜீவனிடத்து ஜீவசக்தி எவ்விதம் சம்மந்தப்பட்டிருக்கிற தென்பதைப்பற்றியும் சொன்னோம். இனிமேல் ஜீவன் என்பது என்ன ? அதின் ஆயுள் நிர்ணயம் என்ன ? என்னும் வினாக்களுக்கு விடைபகர்வோம்.

ஒவ்வொரு அவயவப் பிராணியிடத்து முள்ள ஜீவனானது தடைபடாததும் சுறுசுறுப்புமுடைய ஜீவசக்தியையும், அவற்றோடு அபின்னமாய்க் கலந்திருக்கிற அவயவங்களின் சுறுசுறுப்பையும் முயற்சியையும் பொருந்தியிருப்பதாம். ஆகையால் ஜீவன் முயற்சியாகவும் ஜீவசக்தி அம்முயற்சியினளவாயுமிருக்கிறது. ஒவ்வொரு ஜீவனும் சரீர முயற்சியையும் மனத்தையும் எப்போதும் செய்து கொண்டே இருக்கிறது. இந்த விதமான நடவடிக்கையினால் இடைவிடாமல் சக்தியும் அவயவங்களும் நாசமடைந்து வருகின்றன. அந்த நாசத்தைநிவர்த்திப்பதற்கும் ஜீவன் நிலைத்திருப்பதற்கும் சக்தியும் அவயவங்களும் புதுப்பிக்கப்பட வேண்டியிருக்கின்றன. அது காரணத்தினால் ஜீவச் செய்கையானது நீங்குதலில்லாத சேதம் அல்லது செலவும்(consumption), புதுப்பித்தலுமாயிருக்கிறது. ஜீவனை ஏற்கனவே ஒரு அக்கினிச்சுவாலைக்கு உவமானப்படுத்தியிருக்

கிறேரும். எப்படி அக்கினியில் ஒரே காலத்தில் நாசமும் உற்பத்தியுமுண்டோ, அதுபோலவே ஜீவனிடத்தில் ஒப்வில்லாத சம்ஹாரத்துவமும் சிருஷ்டித்துவமும் உண்டு. இவ்வாறு ஜீவசக்தி யிருந்து கொண்டிருக்கிற வரையில் சரீரம் வளர்ந்து முதிர்ச்சியடையும். அந்தப்பருவத்தில் நாசமும் புதுப்பித்தலாகிய உற்பத்தியும் சமநிறையை ஏற்கும். அதன் பிறகு சரீரசக்தி குறைவுபட ஆரம்பிக்கும்; ஜீவசக்தி குறைவுபடுதலினால் அவயவங்கள் களைப்படைந்து செலவு புதிப்பித்தலைவிட ஜாஸ்திப்பட்டுக்கொண்டேவந்து, முடிவில் சரீரம் நாசத்தையடையும். ஆகையால் ஒவ்வொரு ஜீவப்பிராணியும் வளர்ச்சி (growth), ஒரேவிதமான நிலைமை (stationary), க்ஷீணம் (decline) என்னும் மூன்று பருவத்தையும் கடக்கிறது.

a ஆயுள் அளவைப்பற்றிச் சொல்லுங்கால், அது ஜீவசக்தியைப் பொறுத்தேயிருக்கிறது. எவ்வளவுக்கு ஜீவசக்தி அதிகப்பட்டிருக்கிறதோ அவ்வளவு ஆயுள் விருத்தியடைந்தும், எவ்வளவுக்கு சக்தி மெலினப்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்கு ஆயுள் க்ஷீணமடைந்துமிருக்கிறது. அந்த ஜீவசக்தியானது சில பிராணிகளில் ஜாஸ்திப்பட்டும் சில பிராணிகளில் கம்மிப்பட்டுமிருப்பதைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருப்பதால் மீண்டும் எடுத்துச் சொல்வது தேவையில்லை. ஆகையால் ஜீவசக்தியின் நிறைவே ஆயுள் விருத்திக்கு முக்கிய காரணமென்பது சொல்லாமலே வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

b ஆனால் ஜீவசக்தியைத் தவிரச் சீவன முயற்சியினாலும் அவயவங்கள் நஷ்டமடைந்து வருகின்றன. திட சரீரமுள்ள பிராணிகளிடத்தில் சேதம் மெதுவடைந்தும், மெலிந்த அவயவிகளிடத்தில் நாசம் அல்லது செலவு தீவிரமடைந்தும் வருகின்றன. இதுவுமன்னியில் ஊழியக்காரர்களுக்கு எஜமானன் எவ்வாறு தேவையோ, அதுபோலவே அவயவங்களுக்கும் உயிர் நிலையான இந்திரியங்கள் (Vital organs) எஜமானஸ்தானத்திலிருக்க வேண்டியிருக்கிறது. இந்த இந்திரியங்கள் வியாதியடைந்து உபயோகத்திற்கு அருகமில்லாத காலத்தில் கட்டாயம் ஆயுள் விருத்திக்குக் குறைவு நேரிடும். ஆகையால் அவயவத்திற்கு உறுதி அல்லது திடமும், உயிர்நிலை இந்திரியங்களுக்குச் சுக ஸ்திதியும், ஆயுள் விருத்திக்கு அத்யாவசியமாய் வேண்டியவை,

னாசமடையுந் தன்மை அல்லது செலவழியுந் தன்மை நிரம்பவும் மெதுவாக நடப்பதையும் அதி தீவிரமாய் நேருவதையும் அனுசரித்து ஆயுள், விருத்தியையும் குறைவையு மடைகிறது. எப்படியெனில், ஒரு மெழுகுவத்தியானது ஒரே நுனியில் கொளுத்தி யெரிய விடப்பட்டால், அந்த முழு வத்தியும் செலவழிய எவ்வளவு நேரம் செல்லுமோ அதில் பாதி அளவு நேரத்திலேயே அதே வத்தியை இரண்டு நுனி யிலும் கொளுத்திவிட்டால் செலவழிந்துபோய்விடுவதைப் போல, ஓர் வெளிச்சத்தைச் சாதாரணவாயுவில் எரியவிடும் பட்சத்தில் அதிலுள்ள எண்ணெய்ச் சத்து எவ்வளவு நேரத் தில் செலவாகுமோ அதில் பத்து மடங்கு தீவிரமாக அதே வெளிச்சத்தைப் பிராணவாயுவில் எரியச்செய்தால் செலவழி யும். ஆயுள் விருத்தியும் சரீரத்தில் செலவு ஜாஸ்திப்பட அவ் வளவுக்குக் குறைவையடைந்து வரும்.

(இன்னும் வரும்.)

S. குமாரசாமி மேற்கொண்டார்.

ஆரியர்களின் ஸங்கீத முறை.

(109-ம் பக்கத்தொடர்ச்சி.)

உதாரணமாக, பாவநி என்னும் ராகத்தை எடுத்துக்கொள் வோம். அதின்பெயரில் உள்ள முதல் இரண்டு அக்ஷரங்களி லிருந்து நாற்பத்தொன்றாவது ராகம் என்று அறிந்துகொள்ள லாம். அந்த எண்ணை ஆறால் வகுத்தால் வரும் மிச்சம் ஐந்தா கிறது. ஆகவே, அவ்விராகத்துக்கு தைவத நிஷாதத்தின் ஐந் தாவது பிரஸ்தாரம் சதுச்சுருதி தைவதமும், காகலி நிஷாத முமாகும். இவ்விராகம் பிரதி மத்தியம மேளங்களில் முதல் சக்ரமாகிறது. அப்போது இவ்விராகத்துக்கு ரிஷப காந்தாரங் களின் முதல்பிரஸ்தாரமானதால், இந்த ராகத்துக்கு சுத்த ரிஷபமும், சுத்த காந்தாரமும் ஆகும்.

இந்த ராகம் இரண்டாவது முப்பத்தாறு ராகங்களில் ஒன்றானதால் இது பிரதிமத்யம ராகம் என்றும் அறியலாம்.

ஆகவே இவ்விராகத்துக்குள்ள ஸ்வரங்கள் ஸ ரி$_1$ க$_0$ ம$_2$ ப த நி ஸ' என்பதாம்.

இந்தராகத்துக்கு ஸ்வரங்கள் இன்னவையென்று தெரிந்தவுடனே வேறு சில ராகங்களை இதில் ஜந்யமென்று சொன்னால் அந்த ராகங்களுக்கும் இந்த ஸ்வரங்களே வருகின்றனவென்று அறிந்துகொள்ளலாம்.

மேலே சொன்னதைக்கொண்டு இந்தப் பிரஸ்தாரம் செய்தவர்களின் அபிப்பிராயம் இந்த ராகங்கள் இவ்வளவு பேதமுள்ளவைகளாக இருக்கின்றனவென்பதும் தவிர, இந்த ராகங்களின் பெயர்களைக்கொண்டு அவை அவை இத்தனையாவது ராகம் ஆகிறது என்பதை அறிவிக்கவுமே. தவிரவும், அந்தந்த ராகங்களுக்கு உள்ள ஸ்வரம் இன்னின்னவையென்றும் ஊகித்தறிந்துகொள்ளும் விதமாக ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இந்தமாதிரி உண்டான எழுபத்திரண்டுக்கும் மேளராகம் எனப் பெயரிட்டிருக்கிறார்கள்.

இப்படிக் கணக்கால் ஏற்பட்ட ராகங்கள் எழுபத்திரண்டும் இருந்தாலும், இந்த ராகங்கள் முழுவதையும் பாடுவது வழக்கத்தில் இல்லாமலிருந்தது என்பது யாருக்கும் தெரிந்த விஷயம். "லக்ஷண கீதம்" என்னும் ஸங்கீத கிரந்தத்தில் இந்த எழுபத்திரண்டு ராகங்களிலும் ஒவ்வொரு கீதம் செய்யப்பட்டுள்ளது. (கீதம் என்பது ஓர்வித ஸாஹித்தியம். அதின் லக்ஷணம் ஸாஹித்திய விஷயங்களைப்பற்றி எழுதும்போது விவரித்து எழுதப்படும்.) அந்தக் கீதத்தைக்கூடப் பாடுவோர் இல்லாமலேயிருந்தது. எப்பொழுது அந்தக் கீதங்களையே பாடுவாரில்லையோ அந்த ராகங்களின் ஸ்வரூபம் இன்னதென்று தெரியாமலிருந்தது. ஸ்ரீமாந் தியாகய்யர் அவர்கள் அவதரித்து வழக்கத்திலுள்ள ராகங்களில் ஸாஹித்தியம் செய்து அலுத்து, அதில் திருப்தியடையாமல், வேறு கர்த்தா ராகங்களிலும், ஜந்ய ராகங்களில் இதுவரையில் வழக்கத்தில் இல்லாத அபூர்வ ராகம் என்று சொல்லப்படும் ராகங்களிலும் ஸாஹித்தியம் செய்ய எண்ணி, அந்த அஸாத்தியமான செய்கையை ஸாதித்து, ஸங்கீதத்துக்கு ஒரு புதிய யுகம்வந்துவிட்டாற்போல் ஆக்கிவிட்டார் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். சென்ற வருஷத்தில் காலஞ்சென்ற மகா-ா-ா-ஸ்ரீ சின்

னஸாமி முதலியார் அவர்கள் வெகு சிரமப்பட்டுத் தியாகய்யர் அவர்களின் ஸாஹித்தியங்களை அவரது சிஷ்யர்களிடமிருந்து சேகரம்செய்து அந்தக் கீர்த்தனங்களின் முதல் பதங்களை எடுத்து, அவைகளின் ராகம், தாளம் இவைகளோடு அகாராதியாய் அச்சிட்டுப் பிரசுரம்செய்திருக்கும் புஸ்தகத்திலிருந்து, சுமார் 25 மேள ராகங்களிலும், 250 அபூர்வஜந்ய ராகங்களிலும் தான், தியாகய்யரவர்கள்கூட ஸாஹித்தியம் செய்திருப்பதாகத்தெரிகிறது.

அந்த மஹானுக்குப் பிற்காலம் நமது தலைமுறையார் அறிந்திட்டுப் பதினைந்து வருஷங்களுக்கு முன் இறந்து போனவரும், கந்தருவ காநம்செய்துகொண்டிருந்தவும் சிவபக்த சிரோமணியான ஸ்ரீ மஹா வைத்திநாத சிவன் என்று மறு நாமமுள்ள மஹா வைத்தியநாதய்யர் அவர்கள் இந்த எழுபத்திரண்டு ராகங்களின் ஸ்வரூபமும் விளங்கும்படிக்கும் லக்ஷண லக்ஷியங்கள் கூடிய மேள ராகமாலிகை ஒன்று ஸாஹித்தியம் செய்திருக்கிறார். அந்த ராகமாலிகை, மாப்பிள்ளை துரை என்று யாருக்கும் தெரிந்த ஹிஸ் ஹைநஸ் ஸகாராம் ஸாஹேப் அவர்களின் அரண்மனையில் அநேக வித்துவான்கள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதென்பது இவ்வூரார்க்குத் தெரிந்தவிஷயம். (ஆனால் இந்தக்காலத்தில் மேலே சொன்ன தியாகய்யர் அவர்களின் ஒப்பற்ற கீர்த்தனங்களிருக்க, மஹா வைத்தியநாதய்யர் அவர்களது அற்புத ராகமாலிகையிருக்க, கர்நாடக வித்வான்கள், நாம் கர்நாடக ஸங்கீதம்தான் பாடுவோம் என்று பெயர் வைத்துக்கொண்டு, அவர்களது வயிற்றுக்கொடுமையாலோ, சபையில் உள்ளவர்களது ஸங்கீத ஞாநத்தைப் பரிகாசம் பண்ணுவதற்காகவோ, இவர்கள் ஜாவளிகளையும், ஏகடாக்களையும், மற்றும் சில விந்தையான பாட்டுகளையும் பாட ஆரம்பித்துவிட்டார்கள். இந்த விஷயத்தை நாம் கவனித்து நிறுத்த யத்தனிக்கவேண்டுவது நமது முதல் கடமையென்று நினைக்க வேண்டும்.)

மேலே சொன்னமாதிரி ராகங்கள் இன்னின்ன மேளங்களில் ஜந்யமென்று சொல்வதினால் அந்தராகங்கள் அவைகளின் ஜநக ராகமாகிய மேளங்களுக்கு எந்தெந்த விதமான ஸ்வரம் உள்ளனவோ அந்தமாதிரி ஸ்வரம் இவைகளுக்கும் உள்ளவை என்று அறிய உபயோகமாகிறதென்று சொன்னோம்,

என்றாலும், இந்தப் பிரயோசனமும் எப்போதும் உண்டென்று நினைக்க இடமில்லாமல் இருக்கிறது. இப்போது வழக்கத்தில் இருக்கும் ஆநந்தபைரவி என்னும் ராகம் சில புஸ்தகங்களில் நடபைரவி மேளத்தில் சேர்ந்ததென்றும் சில புஸ்தகங்களில் கரஹரப்ரியா மேளத்தில் ஜந்யமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ராகம் பாடுவதைப்பார்த்தால் இரண்டுவிதமான காந்தாரத்தை உபயோகப்படுத்துகிறார்கள். மகரி-காமா என்று பாடும்போது ஸாதாரண காந்தாரத்தையும் மகரிகமா என்று பாடும்போது அந்தர காந்தாரத்தையும், பாடுகிறார்கள். ஆகவே வேறு மேளத்தில் ஜந்யமென்று நினைக்க இடமாகிறது. அது மாத்திரமல்ல. இதைப் பாடும்போது இரண்டுவிதமான தைவதமும் உபயோகிக்கிறார்கள். கமபதபம கரி என்று பாடும்போது சுத்ததைவமும், நிதபா என்று பாடும்போது சதுச்சுருதிதைவதமும் உபயோகப்படுவதைப் பார்க்கிறோம். மறுபடியும், இரண்டு நிஷாதங்கள் அதே ராகத்தில் உபயோகமாகின்றன. நிதபா என்று பாடும்போது கைசிக நிஷாதமும், ஸநி தநிஸா என்று பாடும்போது காகலி நிஷாதமும் உபயோகத்திலிருக்கிறது. ஆகவே, இந்த ராகத்தை எட்டுமேளத்தில் ஜந்யமாகிறது என்று நினைக்க இடம் ஏற்படுகிறது.

இவ்விதமாக இன்னும் அநேக ராகங்களில் இரண்டுவிதமான ஸ்வரங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ராகங்களை இன்ன மேளத்தில்தான் ஜந்யம் என்று சொல்வதிற்கு நியாயமில்லாமலிருக்கிறது என்பதைக் கொஞ்சம் கவனிப்போர் அறிந்துகொள்ளலாம். ஆகவே, மேளகர்த்தாவை ஏற்படுத்தினவரின் முக்கியக் கருத்து நிஷ்பிரயோசனமாய்விட்டது.

(இன்னும்வரும்.)

P. S. ஸுந்தரம் அய்யர், B. A. L. T.

கைத்தொழில்.

கைத்தொழிலாவதென்ன ?

கடவுள் மனுஷனைச் சிருஷ்டித்துப் பூமியில் வைத்து அவனவன் தன்தன் மனசினால் யோசித்துக் கையினால் வேலை செய்து அவன் சரீரத்தைப் போஷிக்கும்படியாகவும் புத்தியை

விசாலப்படுத்தும்படியாகவும் ஏற்படுத்தப்பட்டதே கைத்தொழிலாம்.

இந்தக்கைத்தொழில் ஈஸ்வரன் மனுஷனைச் சிருஷ்டித்தது முதல் தொன்றுதொட்டு பரம்பரையாய் அனுசரித்துக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆதிமனுஷனாகிய ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஆண்டவர் தோட்டத்தை உண்டாக்காமல் ஒரு பட்டணத்தை உண்டாக்கி அதில் ஆதிமனுஷரைக் குடியேற்றப்படாதா? ஏன் ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி அதில் குடியேற்றுகிறார்? தம் நோக்கப்படி அவன் சோம்பலாய் இராமல் அவன் சரீரத்தைப் பிழைப்பூட்ட அவனைக் கைத்தொழிலில் பழக்கிவிக்கவே அப்படி வைத்தார். அவன் பாவியானபிறகும் முன் நிலத்தைப் பண்படுத்தின கைத்தொழில் தனக்குப் பழக்கமானதினால், ஒரு நேர்த்தியான சமுசாரியாகிப் பற்பல தொழில்களைக் கற்றுத் தன் பின்னடியாருக்கு விர்த்தியாக்கினான். ஆபேல் ஆடு மேய்த்தான்; காயீன் நிலத்தைப் பயிரிட்டான். ஆகையால் மனசினால் யோசித்துக் கையினால் செய்யும் எந்தத்தொழிலும் கைத்தொழிலாம்.

கைத்தொழிலின் சிறப்பு:

கைத்தொழில்கள் மனுஷனுக்கு மிகவும் அவசியமானவை. உலகத்தில் நாகரீகம் உள்ளவர்களுக்கும் நாகரீகம் இல்லாதவர்களுக்கும் கைத்தொழில்கள் இன்றியமையாதன. ஒருவன் எவ்வகைப்பட்ட சம்பத்துடையவனாய் இருந்தாலும், கல்விமானாய் இருந்தாலும், ஏழையாய் இருந்தாலும், அவனைப் பசி, தாகம், குளிர் முதலியவை பிடிக்காமல் விடா. இவற்றை நிவிர்த்தித்துக்கொள்ள மனுஷனுக்குக் கைத்தொழில்கள் அவசியமானவை. பிற உயிர்கள் தன்னை வருத்தும்போது தனக்குப் பாதுகாப்பாய் இருக்கும்படி கொம்பையும், குளிர், வெயில், மழை முதலியவற்றால் தனக்குச் சங்கடம் நேரிடாதிருக்கும்படி தோல், ரோமம், முதலியவைகளையும் மிருகங்களுக்குக் கடவுள் அமைத்திருப்பதுபோல் மனுஷனுக்கு அவர் யாதொன்றும் அமைத்துவைக்கவில்லை. ஆகவே புறம்பான லக்ஷணத்தை ஆராய்ந்து பார்க்கையில் எல்லாப் பிராணிகளிலும் மனுஷன் மிகவும் ஆதரவற்றவன் என்று தெரியவருகிறது. ஆகையால் மனுஷன் தன்னுடைய பாதுகாப்புக்காக வேண்

டிய சகல பொருள்களையும் தன்னுடைய விவேகத்தைக் கொண்டு கரசரணாதி அவயவங்களைத் தக்கபடி உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்பதே கடவுளின் கருத்தென்பதற்குச் சந்தேகமில்லை.

(1) இவ்வுண்மையை உணரப்பெறாத சிலர் மெய்வருந்தி வேலைசெய்யும் உழவர்கள் முதலிய தொழிலாளிகளை அலக்ஷியம் பண்ணுகிறார்கள். மெய்வருந்தி உழைத்து வேலைசெய்வதினாலல்லவா, "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்ற பழமொழிப்படி மண்மேடும், கல்மேடும், முள்ளும், ஊலாம்பழுமுமான காடுகள் சிங்காரத்தோட்டங்களாகத் திருத்தப்படுகின்றன. இது எதினால், கைத்தொழிலினாலல்லவா? நமக்குப் பிராணாதாரமாய் இருக்கும் நெல், தினை, சோளம், கம்பு, கேழ்வரகு, முதலிய சகல தானியங்களும் விளைந்து களஞ்சியத்தில் சேருகின்றதே, கைத்தொழிலினாலல்லவா?

(2) காட்டிலுள்ள பஞ்சும் ஆட்டின்மேலுள்ள மயிரும் பட்டுப்பூச்சிகள் தரும் பட்டும் திவ்வியமான ஆடைகளாகவும், கம்பளங்களாகவும், மெத்தைகளாகவும் அரசன்முதல் நீசன் வரைக்கும் உபயோகமாகி வருகின்றதே இது எதினால்? கைத்தொழிலினாலல்லவா?

(3) கட்டி கட்டியாய் உதவியற்றிருக்கும் மண்கள் நேர்த்தியான செங்கல்களாவதும் அரசன் கொலுவீற்றிருக்கத்தக்க மாடமாளிகை, கூடகோபுரங்களாக அமைவதும் எதினால்? கைத்தொழிலினாலல்லவா?

(4) புழுதியும் மண்ணும் கல்லுமாய் இருக்கிற பஞ்சலோகத்தைக் கொண்டு எந்திரங்கள் செய்வதும், நாணயங்கள் செய்வதும், ஒளிவீசும் ஆபரணங்கள் செய்வதும், எதினால்? கைத்தொழிலினாலல்லவா?

(5) ஆரணியங்களிலுள்ள விருக்ஷங்கள் கடல்மார்க்கமாய் உலகமெங்கும் உலாவுவதற்குக் காரணமேது? உழைப்பே! மனுஷன் மெய்வருந்தி வேலைசெய்வதினால் ஆகாத காரியமுண்டா? பெரிய பட்டணங்களையும் விருக்ஷங்களையும் அழித்துக்கொண்டுவரும் நதிகளைப் பாலங்கள் மூலமாய் மனுஷன் நடக்கக்கூடியவனாய் இருப்பதற்கும், காற்று நுழைவதற்கிடமிராத பர்வதங்களை அவன் ஊடுருவிக்கடப்பதற்கும் இட

மாய் ஒத்தாசையாய் இருப்பது எது? உழைப்பு என்னும் கைத்தொழிலே.

(6) பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐம்பூதங்களும் மனுஷனுக்கு ஆட்பட்டு அவனுக்கு வேண்டிய குற்றேவல்களைச் செய்துவருகின்றன. பிராணனுக்கு அத்தியாவசியமாய் வேண்டிய காற்று நுழைவதற்கிடமிராத பூமியின் அடிப்புறத்தில் சென்று உலோகங்களிருக்கும் கனிகளைச் சோதிப்பதும், மலைகள், பெருநதிகள், சமுத்திரம் இவற்றிற்கு அடிப்புறத்தில் பிராணமோசமின்றிச் சனங்கள் புகைவண்டித் தொடர்களில் ஏறிப்போவதும், கரைவழியும் தெரியாத சமுத்திரத்தில் மாலுமிகள் கப்பலை ஓட்டி நினைத்த இடம் பிராணமோசமின்றிச் சேர்ப்பதும், சமுத்திரத்துக்குள் முத்து நவரத்தினம் முதலிய பொருள்களை வாரிக்குவிப்பதும் எதினால்? கைத்தொழிலினாலல்லவா?

(7) பிராணனுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கக்கூடியது நோய். அதைப் போக்குவதற்குச் சஞ்சீவி போன்ற ஒளஷதங்கள் புல், பூண்டு, கொடி, கிழங்கு, லோகம் இப்படியாக இருக்கின்றன. அவைகளை அந்தந்த நோய்க்குத் தக்கபடி இன்னின்ன வியாதிக்கு இன்னின்ன மருந்து என்று கண்டுபிடித்து வைத்தியர்கள் உலகத்தில் எப்பக்கமும் மானிடர்களைக் காக்கிறார்களே! அது எதினால்? கைத்தொழிலினாலல்லவா? இன்னும் நாம் அறிந்து அனுபவிக்கவேண்டிய பயன்கள் யாவற்றையும் நமக்குக்கைகூடி வரச்செய்வதற்குக் கைத்தொழில் என்னும் கருவியேயன்றி வேறு யாதொன்றும் கிடையாது.

கைத்தொழில் விஷயத்தில் இந்தியாவுக்கும் மற்றும் இதர தேசங்களுக்கும் இருக்கிற பேதாபேதமும், நம் இந்தியாவில் கைத்தொழில் விர்த்தியாகாததற்குக் காரணமும் பின்வருமாறு: விவேகமில்லாத சாதாரண ஜனங்கள் மெய்வருந்தி வேலைசெய்வதைக்காட்டிலும் கல்வித் தேர்ச்சியினால் அறிவடைந்தவர்கள் அந்தப்படி வேலைசெய்யத் தலைப்படுவார்களாகில், அவர்களுக்கும் அவர்கள் தேசத்தாருக்கும் பெருத்த நன்மை விளையுமென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. கல்வி கற்ற ஒவ்வொருவரும் உத்தியோகங்களையே நாடித்திரிவார்களாகில் நம்முடைய பிராணாதாரத்துக்கும் தேக ஆரோக்கியத்துக்கும்

இன்றியமையாதவையான கைத்தொழில் வேலைகள் போகிற வழி எப்படி?

ஐரோப்பியரையும் சுதேசிகளையும் இதுவிஷயத்தில் ஒப்பிட்டுப் பார்த்தால், எவ்வளவோ ஆயிரமடங்கு வித்தியாசமுண்டு. அவர்கள் ராஜாக்களாய் இருந்தபோதிலும் பிரபுக்களாய் இருந்தபோதிலும் கல்விமான்களாய் இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் பெரிய பற்பல கைத்தொழில்களை மனசினால் யோசித்து அந்தப்படியே உடனே செய்து அதை விர்த்தி பண்ணி உலகமெங்கும் 'இங்கிலீஸ்காரர் வேலை' என்பதாய் விர்த்தியடையச்செய்கிறார்கள். இங்கிலாந்து தற்காலம் இவ்வளவு மகிமையடைந்திருப்பதற்குக் காரணம் அவர்கள் ஒவ்வொருவரும் கைத்தொழில்களை நன்கு மதித்து அவைகளை விருத்திசெய்து வருவதே! அதற்குச் சில திருஷ்டாந்தங்கள் உண்டு.

(1) நம்மையாளும் - எட்வாட் சக்கிரவர்த்தி பாலியப் பிராயத்திலே மேச்சோடு பின்னும் வேலைபடித்தார்.

(2) அவரது புத்திரனாகிய பிரடிக் பிரபு கயிறு திரிக்கப் படித்திருக்கிறார்.

(3) அவரது மைத்துனராகிய இரண்டாவது நிக்கோலாஸ் என்ற ஸார் அரசர் நிலத்தை உழுது பண்படுத்தி விதைக்கவும் அறுக்கவும் கைபடிந்தவர். "மேழிச்செல்வம் கோழைபடாது."

(4) ஜர்மன்தேசத்து உல்லியம் சக்கிரவர்த்தி அச்சடிக்கிற வேலையில் நன்றாய்த் தேர்ந்தவர்.

(5) இத்தாலியா தேசத்து ஹாம்பர்ட் இராஜன் சப்பாத்துச் செய்வதில் வெகு சமர்த்தர்.

(6) சுவீடன் தேசத்து ஆஸ்கார் வேந்தன் விறகு பிளப்பதில் கெட்டிக்காரர்.

(7) காலஞ்சென்ற கிளாட்ஸ்டன் மந்திரியும் கோடாரியால் வெட்டுவதில் வெகு சமர்த்தர்.

(8) காலஞ்சென்ற நமது விக்டோரியா சக்கிரவர்த்தினி பின்னல்வேலை, பலவிதமான தையல்வேலை இவைகளில் மிகத் திறமையுடையவர்கள். ஆதரவுச்சாலைகளில் தங்கும் பலஹீனமான ஏழைகளுக்கென்று எத்தனையோ குளிருக் கடக்கமான வுடைகள் தைத்துக்கொடுத்தீ உதவினார்கள். இராஜாக்களே

இப்படிக் கைத்தொழிலில் தேர்ச்சிபடைந்து வேலைசெய்வார்களானால், ஏழைக்குடிகளாகிய நாம் எத்தனையோ அதிக ஜாக்கிரதையாய்க் கைநீட்டி வேலைசெய்ய அவசியமிருக்கிறது. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்."

(இன்னும் வரும்.)

D. சாலமன், கருணாநிதி இல்லம்.

விஷ்ணுவர்த்தனன்.

(144-ம் பக்கத்தொடர்ச்சி)

கௌரவம் வகித்த ஒரு சைவர் வாதத்துக் கழைத்த பொழுது, அவமதிப்பாகவும், நிந்தையாகவும் தம் சிஷ்யர் மறுமொழி யனுப்பியது இராமாநுஜரைமோச நிலைக்குட்படுத்தியது. இவ்வாறு பிழைத்த சீடர் குருஸ்தானத்தை அபகரித்துக் குருவை மைசூரிலுள்ள பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார். இங்கு இராமாநுஜர் குருபரம்பரைப்பிரகாரம் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்ததாகத்தெரிகிறது. பிட்டிதேவர் பின் இவரை அறிந்தார். மனப்பூர்வமான பக்தியும், தமதுசமயத்துக்குத்திருப்பவல்ல சாமர்த்தியமும் அரசன் மனதைக்கவர்ந்திருத்தல் வேண்டும். 1116 கி. பி. யில் அரசன் வைணவனான். பிட்டிதேவர், இதுமுதல் விஷ்ணுவர்த்தனனென்ற நாமம் புனைந்து வாழ்ந்துவந்தார்.

இவ்விஷயம் பற்பல துறைகளில் பலவிதமாய்க் கூறப்பெற்றுளது. இராமாநுஜர் சாலிக்கிராமத்தில் நாமமிட்டுக்கொள்ளும் திருமண் தீர்ந்துவிடவே, அவர் இன்ன செய்வதென்றறியாது மதிமயங்கினார். மேலுக்கோட்டைக்கருகில் ஒரு குன்றில் இம்மண் இருப்பதாகக் கனவு கண்டு அக்குன்றைத் தேடிச்செல்லுகையில் தோண்டனூரில் கூடாரமடித்திருந்த பிட்டிதேவரை (விட்டலதேவ ராயர்) வழியில் கண்டார். இவர் மகளுக்கு ஒரு பேய் பிடித்திருந்ததாம். ஜைனமாந்திரீகங்கள் அப்பேயை ஓட்டுவதில் தோல்வியடையவும், இராமாநுஜர் அதை ஓட்டவும், இவர் மேம்பாடு அரசன்மனத்தில் பதிய

லாயிற்று. அரசன் வைஷ்ணவமதத்தைக் கைக்கொண்டொழுகலானான். இவ்வண்ணம் வைஷ்ணவர்கள் சரித்திரங்களில் கூறப்பெற்றுளது. மேலும் அரசன் முன்னிலையில், இராமாநுஜருக்கும், ஜைனச்சந்நியாசிகளுக்கும் நடந்த வாதத்தில் அவர்கள் தோல்வியடைந்த காரணத்துக்காகச் செக்கிலிட்டு ஆட்டப்பெற்றனர்களாம். தோண்டனூரில் இச்செக்கென்று ஒரு செக்கை இப்பொழுது சொல்லுகிறார்கள்.

ஜைனர் சரித்திரங்களால், இராமாநுஜர், அரசன் மனைவிமார்களில் ஒருத்தியைக்கண்டு போதித்து அவள் மூலமாய் அரசனைத் தன்மதத்துக்குத் திருப்பிக் கொண்டதாகத் தெரிகிறது. மேலும் அரசன் வெகுகாலம் வரை உடன்படாமலேயிருந்தானாம். ஆனால் யுத்தத்தில் வலக்கை விரலொன்று துண்டித்துப் போகவும், ஜைனர்கள் இவனுடன் புஜிக்கமாட்டோமென்று சொல்ல, வைஷ்ணவனானானாம்.

இவ்விருவகைச் சரித்திரங்களிலும் பிந்தியது சரியானதன்று. ஏனெனில், விஷ்ணுவர்த்தனர் வைஷ்ணவரானபின் கூடத் தன் ஜைனமனைவிகள், மந்திரிமார்கள், குடிகள் முதலானோர்களை மிக்கமரியாதையுடன் நடத்தினராம். அவர் மனைவிகளுள் முதல் மனைவி ஆயுட்காலமெல்லாம் ஜைனமதஸ்தையாகவே யிருந்ததற்குச் ச்ரவணபேல் கோலாவிலுள்ள (Sravana Belgola) சாவதிகாண்ட வர்மபஸ்தி போதுமான சான்றாகும். அவர் பெண் ஹாரியல் (Hariale) ஜைனமதஸ்தை. இராஜ்யம் ஸ்தாபிப்பதில் அவருக்கு மிக்க உதவியாயிருந்த அவர் சேனை வீரனாகிய கங்க ராஜாவும் ஜைனனே. தன் இராஜ்யத்திலுள்ள ஜைனக் கோயில்களைப் பழுது பார்த்துப் புதுப்பித்து அவைகள் கோபன்னுவையாவது கோபாலை யாவது ஒத்திருக்கச் செய்தாரெனச் சில சாஸனங்களால் வெளியாகிறது. இவ்வாதி காரணங்களால் அந்தரங்க சூட்சியால் அவர் வைஷ்ணவராயிருக்கமுடியாது. மேலும், ஜைனர்களிடத்தாவது, அம்மதத்தினிடத்தாவது அவ்வளவு அருவருப்புடையவராயு மிருந்திருக்கமாட்டாரெனவும் வெளியாகிறது.

முந்தியது ஒரு பெரிய மனிதன் வாழ்நாட்களில் நடந்த ஒரு விஷயத்தை அற்புத சம்பவமாகக் கூறியுள்ளதாகும். அக்காலத்தில் மதவாதங்கள் அரசர்கள் முன்னாலும், பண்டிதர்கள் முன்னாலும் நடப்பது ஸகஜம். இத்தகையவாதங்

களைப்பற்றி ஷிம்ஹோக (Shimoga) சாஸனங்களில் குறிப்புகள் அநேகமிருக்கின்றன. இவ்வாறு இராமாநுஜருக்கும் ஜைனருக்கும் நடந்த வாதத்தில், எதிரிகளின் விவகாரங்களைச் செக்கிலிட்டு ஆட்டியிருக்கலாம். செக்கு விஷயம் இதைவிட வேறுவிதமாக இருத்தலியலாது. ஏனெனில், இராமாநுஜர் தாம் ஜைனர்களைச் செக்கிலிட்டு ஆட்ட எண்ணமுடையவராயிருந்தாலும், அரசராகிய பிட்டி தேவர், தயாளத்துவத்தினுலில்லாவிட்டாலும், அரசுமுறை நிர்வகிப்புக்காகவாவது ஒத்துக்கொண்டிருக்கமாட்டார். தம்மைச் சுற்றினும் மனைவி, மந்திரிமார், சேனைத்தலைவர் எல்லோரும் ஜைனராயிருக்க, அவர் அவ்வாறு செய்யச் சம்மதித்திருந்திருப்பாரென்பது அசம்பாவிதமேயாகும். வைஷ்ணவர்கள் அதிகரித்தும் அவர்கள் மதம் விருத்தியடைந்தும், ஜைனர்கள் குன்றியும் அவர்கள் மதம் க்ஷீணதசையடைந்தும் வந்த தென்பதேயன்றி வேறல்ல. இந்தவிஷயத்தில், இன்னார்தான் பாபியென்பதற்குமில்லை.

(இன்னும்வரும்.)

S. N. ஸ்ரீநிவாஸன்.

அணங்குகொ லென்னுங் குறள் கைக்கிளைத் திணையே.

(141-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவன்றி ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறிய இலக்கணங்களுட் சிலவற்றுக்கு வழக்கிறந்தமையான் உரைகாரரெல்லாரும் உதாரணமிறந்தவென வுரைத்தாரேயன்றி அதுபற்றி அவ்விலக்கணங் கொள்ளாமென்று கூறுமையுங் காண்க. இனி, அது பண்டைநூலினுங் காணப்படுவதொன்றேயன்றி இறந்த வழக்குமன்று. அது புறநானூறு 149-வதுபாட்டிற் "கைவழிமருங்கிற் செவ்வழிபண்ணி" என்பதையும் "கைவழியாகியயாழின்கட் செவ்வழியென்னும் பண்ணை வாசித்து" என்னுமுரையையும் "கையகத்து எப்பொழுது மிகுத்தலான் யாழைக் கைவழியென்

ளூர்; ஆகுபெயரான்." என்னுமுரைக் குறிப்பையு மாராயிற் புலப்படும். என்னை:—ஆங்குப்பண்ணை வாசித்தல் யாழினது நரம்பகத்தன்றி யாழின்கணின்மையானுங், கையும் வழியுமாகிய இரண்டனுள் ஒரு சொல் நரம்பை யுணர்த்தாமையின் ஆகுபெயராகாமையானும், கைவழியென்பது அன்மொழித் தொகையாகிக் கையகத்துள்ளது முதலாகிய யாழேயாதலின் அதனை யுணர்த்தயாழ் ஆகுபெயராகி அதன் சினையாகிய நரம்பினையுணர்த்திற்றென யாவரானு முணரப்படலானென்பது.

இவ்வாற்றான் ஆங்கு உரைகாரர் கைவழி யென்னு மன்மொழித்தொகை ஆகுபெயராகி நரம்பினை யுணர்த்திற்றென விளக்காவிடினும் அஃதன்மொழி யாகுபெயராதல் மறுக்கப் படாமையுமறிக.

இனிப்பண்ணை வாசித்தல் யாழகத்தன்று யாழின் நரபகம்த் தென்பது காட்சியளவையானும், "செயனின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது நயனின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினு" மென, அதனை விதந்து கூறிய கலித் தொகை முதலிய நூலானு மறியப்படும். இதனானே அன்மொழியாகுபெயர் பண்டை—நூலினுமுண்மை காட்டப்பட்டது.

இனி அவர் அணங்குகொல் என்னுங் குறள் கைக்கிளையாயின் ஆகுபெயரென்றது பொருந்துமென்றும், வள்ளுவனார் கைக்கிளை பெருந்திணையிரண்டனையும் களைந்து ஐந்திணை யொழுக்கத்தினையே களவுகற்பெனப் பகுத்தோதலாற் பொருந்தாதென்றும், காமத்துப் பாலில் முதலேழதிகாரங்களும் களவாதலிற் கைக்கிளை மயங்காவென்றும், மயங்கிற் றிணைமயக்கமாய் வழூப்படுமென்றும், இவ்வாறே நக்கீரனார் களவியலுரையிற் கைக்கிளையிலக்கணங்கூறி ஈங்ககத்திணையுள் அஃதுரைப்பது திணைமயக்க மாதலின் மேலதே பொருளென்று கூறினாரென்று முரைத்தார்.

ஆசிரியர் தொல்காப்பியனார் களவொழுக்கத்தின் கண், தலைமகளது வனப்புத் தலைமகனை இன்புறுத்துமெனக் கூறினாரன்றி அணங்குறுத்துமெனக் கூறாமையானும், ஏமஞ்சாலா விடும்பையெய்தல் புல்லித்தோன்றுங் கைக்கிளைக்குறிப்பே என்று கைக்கிளையிடத்து மருந்து பிறிதில்லாப் பெருந் துயரெய்தலைக் கூறினாராதலானும், உலகியலினும் மகளிரது உளப்பாட்டுக்குறிப்பினையறியினும் அறிந்து புணர்ச்சியெய்தினும் அவர் வனப்பு அணங்

குறுத்தாம லின்புறுத்தலும் குறிப்பறிதற்குமுன் அணங்குறுத்தலும் கண்கூடாக அறியப்படலானும், அன்றியும் சந்தனுவென்பான் பரிமளகந்தியின் வனப்பால் அவளுடன்பாடு பெறாத கைக்கிளையாகிய ஒருதலைக்காமத்துள் வருந்தினனென்பதும் அவளை மணந்த அன்புடைக்காமத்து வருந்தாமலின்புற்றானென்பதும் பாரதங்கூறலானும், வள்ளுவனார் தகையணங்குறுத்தல் குறிப்பறிதல் புணர்ச்சிமகிழ லென நிறுத்திய அதிகாரமுறை, தலைமகள் குறிப்பறியாமல் கைக்கிளைக்காமத்தானே அவளது தகைபா னணங்குறுத்தப்பட்ட தலைமகன் அதன்பின், அவள் குறிப்பை யறிதலென்னும் புணர்ச்சி நிமித்தமெய்தி அதன் பின்னர்ப் புணர்ந்து மகிழ்ந்தானென விளக்குதலின் அம்முறையே புணர்ச்சிக்கும் புணர்ச்சி நிமித்தத்துக்கும் முன்னிகழ்தற்பாலது கைக்கிளையாகிய ஒருதலைக்காமமன்றி அன்புடைக்காம மாகாதென் றறிவித்தலானும், தகையணங்குறுத்தலை அன்பு டைக்காமமாகிய களவென்று நாடக வழக்காவது உலகியல் வழக்காவது கூறாமையானும், புணர்ச்சி நிமித்தமாகிய குறிப்பறித லதிகாரத்து முதற்கண் ஒன்றந் நோய்மருந்தெனவும் சிறு நோக்கங் காமத்திற் செம்பாகமன்று பெரிதெனவுங் கூறுமாற்றான் அதற்கு முன்னுள்ள தகையணங்குறுத்தலைப் புணர்ச்சியிலாவது புணர்ச்சி நிமித்தத்திலாவது சேர்த்தல் கூடாமையானும், புணர்ச்சியும் புணர்ச்சிநிமித்தமு மாகாவிடின் அணங்குறுத்தலைக் களவிற்கு முன்னிகழுங் கைக்கிளை யெனல் பொருந்து மன்றிக் களவெனல் பொருந்தாமையானும், கைக்கிளை யாகாதென்ற அவரும் அதனை எனைத்திணையுள் இன்ன திணையெனத்துறை கூறாமையானும், வள்ளுவனார் கைக்கிளை பெருந்திணை களைந்தாரெனலும் அணங்குகொல் எனும் குறள் கைக்கிளையாகாதெனலும் அதனாற் கனங்குழை ஆகுபெயரன்றெனலும்பொருந்தாமை காண்க.

(இன்னும் வரும்.)

சோழவந்தான், அ. சண்முகம்பிள்ளை.

(ஆசிரியப்பா)

நாகம. தோகை யடைந்த துயரம் பெரிது!

சேவப்ப. நாகம! கொடிது நங்கையி னவலம்!

அரிய. எத்துணை மனவலி யெய்திய மாந்தரு
மித்துணைத் துயருக் கிரங்குவ தியல்பே!

கனக. (இறைஞ்சி நின்று)

பேதை பாவியாப் பெண்பிறந் தேனிம்
மேதினி யாட்கோர் வெய்ய பொறையாய்ச்
சுற்றமு மிழந்தேன், சோகமு முற்றேன்,
நற்றவ னிழந்து நானல மந்தேன்,
நாடு மிழந்தேன், நாண்துறந் திங்கு
தேடியே வந்தேன் றிக்குவே றில்லை!
யாவி போற்றவு மறியே னொருவழி
வாவிநீர் வற்றிட வாடிய மீன்போல்
ஆயதென் செயனு மாக்கமு மிழந்தேன்,
தாயக மானீர்! தமியனைக் காத்தற்
கெவரினி யுள்ளா ரியம்பற் பாலார்?

நாகம. புவனி வேந்தன் பொன்றிடக் கண்டது
விதிவச மாகும், வீணு மவலம்!
பதிபடு துயரம் படருறேல், அம்ம!
ஆரியப் படையூ ரரணே தந்தனம்;
வேரியங் கமலம் விளங்கு வேலிகள்
ஆயிரந் தந்தனம்; ஆர்க்கு நூபுரச்
சேயிழை யாரிற் சிலரையுந் தந்தனம்;
அந்நக ருனதே யமர்ந்து வாழ்க!

கனக. இந்நலந் தந்தீ ரேழை யுய்ந்தனன்,
நாயக னுடலும் நல்குவீ ரைய!
பாய்திரை யுலகம் பழித்திடா வண்ணம்
எங்கோ னுடலை யீமஞ் சேர்த்துவன்.

நாகம. நங்காய்! தந்தனன், நயந்து கொள்க.

கனக. விடைதரக் கொண்டேன், விரும்பிய வெல்லாம்
அடையப் பெற்றேனைய! நீர் வாழி!

(ஓர் சேவகன் வீரசேகரனுடலை எடுத்துக்கொண்டு பின்வர, கனகவல்லி வெளியே செல்ல)

நாகம. பொன்னி நாட்டின் பொலிவே நீர்வளம்!
அன்னதற் கிணையென வமைந்தநா டுண்டோ?
ஆதலி னஃதே யவனியின் றிலகமாம்!
மாதவப் பயனுன் மற்றதைப் பெற்றோம்
என்று செருக்கை யெய்தா திருந்து,
நன்றுப் புரத்தல் நமது கடனே!
மன்னவ னாணை வரவை நோக்குதும்!
இந்நா டாளுதற் கேற்ற முடையோன்,
சீரிய சிந்தையன் செவப்ப நாயகன்,
கூரிய மதியன், கோனெனத் தகுமால்!
நாயக! வென்னுரை நயந்து கொண்டு நீ
தூயநா டோம்பத் தொடங்குக; யானும்
அரிய நாதனோ டணிமதிற் பாண்டி
பரிவுடன் சென்று, பல்லியந் துவைப்பச்,
சந்திர சேகரன் றார்முடி சூடச்,
சிந்தை யுவந்து செந்தமிழ் நாட்டைத்
தென்னவன் செங்கோல் செலுத்த,
மன்னவ னுரைப்படி வழங்கவெண் ணினனே!

களம்—முற்றும்.

அங்கம் 2. களம் 6.

துங்கபத்திரையின் பாங்கர் ஓர் திவ்வியமான பூஞ்சோலை யுண்டு. அப்பூஞ்சோலையில் காஞ்சனை தனது தோழியர் ஆயத்தோடும் செவிலியர் கூட்டத்தோடும் சென்று நீராடி மலர் கொய்து பூச்சூடி அமுதுண்டு பாங்கியருடன் பிணங்கியும் பிறகு அவருடனிணங்கியும் மன்மதக் கோட்டம் வளைந்து கும்மிகொட்டி விளையாடினள்.

அங்கம் 2. களம் 6.

இடம். நகர்ப்புறத்தோர் பூஞ்சோலை. காலம். காலை. (தாதியரும், செவிலியரும், தோழியராயங்களும், நெருங்கி நின்று உரையாட, நடுவே காஞ்சனையும் மூர்த்தியம்மனும், சின்னம்மனும், மதிவிலாசனியும், கஸ்தூரிரேங்கம்மனும், சுந்தரியம்மனும், லேட்சுமியம்மனும், விளையாட)

(ஆசிரியப்பா)

காஞ்ச. நறுந்தேன் பெய்தேன், நங்கை! இவ் வள்ளம்,
முறுவல் கொண்ட முகத்துடன் வாங்கிப்
பருகியென் றேழி! பவளவாய் திறந்தே
யொருமொழி யெனதுள முவப்பக் கூறுவாய்!

மதி. (காஞ்சனை நீட்டியவள்ளத்தைத் தனது கையால் விலக்கி)
வள்ளமும் வேண்டேன்! வார்த்தையும் வேண்டேன்!
உள்ளம் வெறுக்க வுரைத்ததே போதும்.
மலர்களைக் கொய்து மருவிய காலையில்
அலர்பட வுரைத்தாய், அன்னது கிடக்க;
நீர்விளை யாடல் நிகழ்ந்த போதும்
ஒருரை பகர்ந்தாய், உள்ளங் கலங்க!
தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடுவென் றுணர்ந்திலை.
போடிபோ! உந்தன் பொதுவுறு நிலைமை
கோடிய செய்கை கொடிது! கொடியனைப்!

(மதிவிலாசனி விம்மிவிம்மிக் கண்ணீர் சோரிந்து நிற்ப)

காஞ்ச. (அவளைத் தழுவிக் கண்ணீரைத்துடைத்து)
என்னடி பிழைபட விசைத்தேன், ஏழை!
துன்னிய கண்ணீர் துளிப்ப நின்றனை!
நதியுறு புனலை நவிய வெற்பினை!
மதியிலி யானு மகிழ்விளை யாட்டில்
பேசிய வுரைகளைப் பிழையெனக் கொள்ளேல்.—
ஏசுத லெனக்கு மியற்கை யன்றுகாண்.—
கண்களோ சிவந்தன, கமலவாண் முகமோ
பெண்க ளிரங்கப் பெரிதுவா டிற்று!
இழைகளுங் குழைகளு மிலங்கப் பூண்டேம்.
விழைந்து கொய்த விரிமலர்த் தொகுதியைக்
குழைபக் கோதிய கூந்தலின் முடித்தேம்.
மழைநெடுங் கண்ணாய்! வருக! வனைக
ஆடையா பரணம், ஆரம் புனைக,
சேடிய ரியாருஞ் சேர்ந்து கும்மி
கொட்டுவம், எழுக! கோதையே! விரைந்து,
பொட்டு மணிந்து, பூண்பன பூண்டு,

வள்ளம் பெய்த மதுவினை யருந்தி,
உள்ளங் களித்துன் னூடல் தீர்ந்து,
செவ்விதிற் போதுக! சித்தச னலத்தை
நவ்விநேர் விழியாய்! நயந்து பாடுவம்.

மூர்த்தி. மாதருங் கலமே! மதிவிலா சனியே!
ஏதுனக் கரிதுகாண், ஏழை! நீ செய்யும்
சாலமோ பெரிது! தமனியப் பாவையின்
சீலநன் மொழியுன் சிந்தையைச் சுடுமோ?
வைகறை யாமம் மணற்றட மலிந்த
செய்கரைப் பாங்கர்ச் செறிந்த பொழிலிடை
நங்கையர் சூழ்தர நாமிவ ணுற்றே
செங்கை சிவப்பச் செழுமலர் பறித்துத்
துங்கபத் திரையிற் றோய்ந்துநீ ராடிக்
கொங்குலா மலரைக் கோதையிற் சூடி
ஆடையுங் கலனு மழகுறப் பூண்டு
நீடுறப் பொலியு நித்தில மாலையும்
சாந்தமு நீவியுந் தைவரக் குங்குமம்
காந்திட நுதலிற் களிப்புட னணிந்து
மதுவை யுண்டு மனங்களித் திட்டனம்.
இதுவெஞ் செயலா யிருப்ப, ஏழை! நீ
வாடிய முகமும் வருத்தங் காட்டிக்
கோடிய சிந்தையுங் கொண்டனை யாகி
நின்றனை; பாவம்! நினக்கிது செயலோ?
இன்றுன் கூந்த லெடுத்து முடிப்பேன்!
வாடி! யென் கண்ணே! வாடா மலர்களைச்
சூட்டுவன்! கலனுந் தோடும் பூட்டுவன்!
திலகஞ் சேர்த்துவன்! தேனையு மூட்டுவன்!
இலகுற வெழுவாய், எந்திழை யாரொடும்
இனிதினுடி யின்புற் றிருப்போம்.

மதிவி. வனிதை காஞ்சனை வார்த்தையை மறுத்தேன்.
வள்ளங் கொடுத்தால் வணங்கி வாங்குவன்.
உள்ள மகிழ்ந்தேன். ஒண்டொடி! வந்தேன்.

(மூர்த்தியம்மனும் மதிவிலாசனியும் வெளியே செல்ல)

சின்னம். காஞ்சனை யம்ம! கருதிய வாடலில்
யாஞ்சில பாட லியாதோ விசைப்பது?

காஞ்ச. மன்மதன் கோட்டம் வளரு மாதனம்
நன்மதிக் குடைக்கீழ் ஞாலம் புரப்போன்
சீரினைப் பாடிச் சிற்றிடை துவள
நேரிழை யாருட னேயமாய்ப் பாடுதும்
பாங்கியர்! வருக. பாடவு மாடவும்
பாங்குடை யார்களும் பரிந்து வருக.
வாழி! யென் மூர்த்திய மதிவிலாசனியும்
தோழிய ரோடுந் துலங்க வருவர்
வம்மின்! வம்மின்! மாதரீர்!
கும்மி வசந்தனைக் குறித்துக் கொட்டவே.

[மூர்த்தியம்மனும், கோலங்கொண்ட மதிவிலாசனியும் உள்ளே பிரவேசிக்க, தாதியர், செவிலியர் மருங்குசூழ்ந்து நிற்பத் தோழியராயம் கோட்டம் வளைந்து கும்மியடித்தல்.]

(மதிவிலாசனி முறைவைக்க, மற்றவர் எல்லோருஞ் சேர்ந்து சொல்ல.)

சித்தசன்கும்மி.

மதிவி. கையிற் ... ந்த சிலைகரும் பாமவ
னெய்யுங் கணையு நறும்பூ வாம்
மைய லிழைப்பதும் பொய்யுருக் கொண்டிந்த
வையத்தை வென்றனன் மங்கையரே. (1)
அந்தச் சிலைக்குப்பர் நாஅரி வண்டுக
ளானவை பச்சைப் பசுங்கிளி தான்
கந்துக மாகவுங் கொண்டனன் காணந்தக்
கருப்பு வில்லியும் வல்லியரே. (2)
ஆர்கலி யேமாரற் கறைந் தொலித்திடும்
பேரிகை யாமல யக்கா லுந்
தேரெனச் செப்பியே செங்கைகள் கொட்டிநீர்
சேரக் கும்மி யடியுங்கடி. (3)
அம்புலி யைக்குடை யாகவே கொண்டவ
னங்களை யார்படை யன்கங்குலை
யும்ப லெனக்கொண் டுயர்ந்தவ னென்றிடை
யொசிந்து கும்மி யடியுங்கடி. (4)
தேனைப் பழித்தசொன் மானை மருட்டிய
சேல்விழி யீர்கோகி லங்காளம்

மீனத் துவசமுங் கொண்டனன் மாரனே
மேதினி வேந்தனு மெல்லியரே. (5)
சித்தசன் செந்திரு மாமகன் வித்தகன்
செப்பிய வைகளுந் தப்பறவே
இத்தனை யுந்தனக் கங்கமாக் கொண்டன
னிசைப்ப தென்னினி யேழையரே. (6)
வாழி திருமகள் வாழி கலைமகள்
வாழி மலைமக ளன்புறுநந்
தோழியர் நாளுந் தழைத்து நலன்கொடு
வாழியர் வாழியர் வாழியவே. (7)

(நேரிசையாசிரியப்பா.)

சேவிலி. போதுமே தும்பி; பொலந் துடியிடையும்
மாதே! வருந்தும், மலர்க்கர நோகும்;
ஆரஞ் சிந்திய தாடை நெகிழ்ந்தது;
வேர்வையு நுதலில் விளங்க லுற்றது;
பாதஞ் சலித்தது; பருமணிச் சிலம்பி
னுதரப் பூட்டு மற்று விட்டது;
வார்குழல் சரிந்தது; வாட்ட முற்றனை;
நேரிழை யார்களு நெடிது சோர்ந்தனர்;
வஞ்சியே! நிறுத்துக!
காஞ்ச. மதிவிலா சனி! யுன்
பஞ்சின்மென் றளிரடி பாடுற் றதுகாண்!
நன்குன் பாடல்! நன்குன தாடல்!
மென்குயின் மொழிக்குழாம் வியந்தனர் பாங்கியர்.
மதிவி. அம்மணி! யுன்சார் அமைந் திருத்தலே
எம்மனோருக் கியைந்த பாக்கியம்.
ஆக்கமும் பெறுவேம், அழகும் பெறுவேம்,
வாக்கு முறுவேம், வருங்குறை யில்லேம்!
காஞ்ச. மூர்த்தி! யென் செய்தி ?
மூர்த்தி. மூர்த்தியின் செய்தி
நேர்த்தி! நேரம் நினைந்து நின்றனன்!
காஞ்ச. பாங்கிய ரயர்ந்தனர், பகலவன் கிரண
மோங்க லுற்றதால், ஒண்டொடி யார்களே!
களைப்புத் தீரவிக் கடிபொழி லகத்தும்

முளப்படி. சில்பொழு துறைமின், பின்னர்
பொன்னொளிச் சிவிகையிற் போதும்,
நன்னகர் மாக்க ளயங்கெதிர் கொள்ளவே.

களம்---முற்றும்.

அங்கம் 2. களம் 7.

விளையாடிய இளைப்புத்திர, அவரவர் தமது இஷ்டப்படி உலாவிவருவதென்று தீர்மானித்தனர். அப்படியே காஞ்சனை துங்கப்பத்திரையின் கரையோரமாய் மேற்றிசை நோக்கி யாரும் வராத ஓர் பக்கம் உலாவிச் சென்றனள். அப்பொழுது பிஜபூர் சுல்தான் இஸ்மேல் அடில்ஷாவின் மகனான மாலு என்பவன் சூழ்ச்சியால், காஞ்சனை அபகரிக்கப்பட்டு யாவர் திருஷ்டியிலும் படாமற் கொண்டுபோகப் பட்டாள். இராவணன் சீதையைச் சிறை கொண்டதுபோல மாலுவுங் காஞ்சனையைக் கொண்டு சென்று விஜயபுரி நகரத்தில் ஓர் மாளிகையில் வைத்தான். இது இங்ஙனமாகப் பூஞ்சோலையில் மாதர்களும் செவிலியர்களும் காஞ்சனையைக் காணாது வருந்தி நாலா பக்கங்களிலுந் திரிந்து தேடி அல்லலுற்று நிற்கையில், இளவரசன் அச்சுதப்பனும் நமது கதாநாயகனாகிய விசுவநாதனும் சோலைக்குள் வந்தனர். மாதர்களுக்குண்டாகிய குழப்பத்தின் காரணத்தை யறிந்துகொண்டு காஞ்சனையைத் தேடிவருவதென்று விசுவநாதன் துணிந்தான்.

அங்கம் 2. களம் 7.

இடம்-சென்ற களத்தினிடமே. காலம்-சென்ற களத்தின் காலமே.

(மாதர்களும், சேவகர்களும் அல்லலுற்று நிற்ப)

(நேரிசையாசிரியப்பா.)

மதிவி. ஆற்றினிற் பார்த்தேம்! அகன்பொழிற் பார்த்தேம்!
காற்றென வுருவங் கரந்து போயினளோ?

சின்னம். யாவரு முளப்படி யாங்கணு முலாவுக
மேவிய பொழிலிடை மெல்லிய லீரென்
றுரைத்த வோதிம மொக்கலைப் பிரிந்து
விரைத்தடஞ் சோலையை விட்டே கியதோ?

சேவக. பன்ன சாலையும், பங்கயத் தடமுந்,
துன்னு சூழலுந், துருவிப் போந்தனன்.
மங்கைகாண் கிலனு வாளா வந்தனன்.
எங்குற் றனளென் றேழையே னறிகிலன்!
மூர்த்தி. சிற்றிடம் விடாது செவ்விதிற் றேடினம்,
கற்றவர் வியக்குங் காஞ்சனை காண்கிலன்!
சுந்தரி. (தனதுவளைக்கரநெரித்து)
ஏதடி செய்வது? ஏழையே மிந்த
வாதனைக் கோவிவண் வந்து நின்றனம்?
மன்னவன் கேட்கின் மனநிலை கொள்ளுமோ?
அன்னைதான் கேட்கி லாற்றுவாள் கொல்லோ?
மாந்தர் மருங்கு மருவி யாமும்
போந்து புகல்வதிப் புன்மை மொழியோ?
செவிலி. மாயமோ? வஞ்சமோ? நேயமா நின்ற
வாயமு மவல மாயதே! யந்தோ!
கரைந்து நிற்பதுங் காலக் கழிவே!
விரைந்து சென்றிதை வேந்தற்குரைப்பதே
செயலாம். (அச்சுதப்பனும், விசுவநாதனு மாங்கண்வர.)
அச்சுத. என்னே! செவிலி! யென்னே!!
விசுவ. துயரம் நுமக்குச் சூழ்ந்த தென்னையோ?
செவிலி. ஐயன்மீர்! வருக! ஐயன்மீர்! வருக!
வையம் புரக்கு மன்னவன் மதலாய்!
நங்கைய ரியாரு நாடினர் வந்திப்
பொங்கர் புகுந்து, பூக்களைக் கொய்து,
புனல்விளை யாடிப், பொருந்திய காலையில்,
இனத்துட னுடிய விளைப்புத்திர
மேயினர் மாதர் வேறு வேருகப்
போயினள் காஞ்சனை; புக்கிட மறிகிலேம்!
ஓடையுஞ் சோலையு மொருங்கு தேடி
வாடினம்; பதைத்து வருந்தினம், அயர்ந்தேம்;
செய்வ தோர்கிலம்; சேயிழை பிரிவா
லுய்வினை காணு துணர்வு குன்றினம்;
காற்றிற் பட்ட கலமெனச் சுழன்றேம்!
ஏற்றுமி னெங்களை யிடர்க்கட லிருந்தே!
அச்சுத. எங்கணுந் தேடினர், எந்திழை காணர்,
இங்கிதன் மாய மேதோ வறிகிலம்!
விசுவ. நங்கையை நாடுதும் நண்ப!
துங்கபத் திரையின் சூழ லெங்குமே!

களம் முற்றும்.

புத்தக வரவு.

மாதர் மனோரஞ்சினி:—இதன் மார்ச்சுமாதச் சஞ்சிகையை வரப்பெற்றோம். இதன்கண் "சென்னைச் சித்திரக்காட்சி" யில் ஸ்திரீகள் சிலர் எடுத்துக்கொண்ட சிரத்தை அறிவிக்கப் பட்டிருக்கிறது. "தேனும் தேனீயும்" என்ற தலைப்பின் கீழ் மதுரை M. கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் தேன் எடுக்கும் விதத்தையும், 'தேன் காட்டி'ப் பறவையின் இலக்ஷணத்தையும் தேனீயைப் பின்றொடர்ந்து சென்று தேன் கூடறிதலையும் செம்மையாய் விளக்கி இருக்கிறார். முன்காலத்து ஸ்திரீகளுக்கும் தற்காலத்து ஸ்திரீகளுக்குமுள்ள தாரதம்மியம், காலமறிந்து குற்றங்கடிதல், இராமாயண வினாவிடை, கல்வியைப் பற்றிய ஓர் சம்பாஷணை, ஐப்பசி உத்சவம், கற்றோர் காலடி, ஸ்திரீரத்தினம், முதலியன வேறு வியாசங்கள். பெண் கல்விக் கும்மியும், 'அன்னையை மறவேல்' என்ற ஆசிரியப்பாவும் மிகவும் அழகுள்ளன. (முத்திராசாலைக்குச் சென்றபோது, ஏப்ரல் மாதச் சஞ்சிகை வந்தது. அதைப்பற்றிய குறிப்பை அடுத்தமாதத் தமிழகத்தில் பார்க்கலாம்.)

கிராமபரிபாலினி: இப்பத்திரிகை கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம கிருஷிகட்கும் மிகுந்த உபயோகமாகும்படி காஞ்சிபுரத்தில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையின் 4, 5, 6, ஆவது சஞ்சிகைகள் வரப்பெற்றோம். இவைகளில் விஷயங்கள் மிகவும் கவனிக்கத்தக்கன. உதாரணமாக 6-வது சஞ்சிகையில், சிவில் நடவடிக்கைகளின் விவரம் அறிவிக்கப்பட்டு வருகிறது. "கிராமச் சிப்பந்திகள்" என்ற தலைப்பின் கீழ் கிராம உத்தியோகஸ்தர்கள் இன்னார்களென்றும் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைமை இன்னவென்றும், முக்கியமாய்க் கர்ணமும் முன்சீபும் தலையாரி வெட்டியான் விஷயமாய் வரும் மனஸ்தாப மன்னியில் ஸௌஜன்னியமாய் இருக்கவேண்டும் என்ற விஷயமும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. "இந்தியா வரவு செலவு கணக்கு"ம் கலெக்டர்களுடைய ஸ்டாண்டிங் ஆர்டர்களும், நிலவரியைப்பற்றிய விஷயங்களும், மாட்டு எருவைச் சேர்த்து ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கும் விஷயமும், சில பரீக்ஷைக் கேள்விகளுக்கு விடைகளும், அமைந்துள்ளன.

சந்நியாஸிகீதம்:—இது மதுரை விவேகாநந்த சபைப்பிரதம காரியதரிசியாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் இயற்றியது. இது ஓர் சிறிய புத்தகம். இதில் 13

பாக்கள் அமைந்துள்ளன. ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள், ஆங்கில கீதத்தில் பாடிய மிகவும் உயர்ந்த கருத்துகளைத் தமிழில் மிகவும் எளிய இனிய நடையில் பாடியிருக்கின்றார். இவர் கல்வித் திறமை நன்கு வியக்கத்தக்கது. மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகவும் இருக்கின்றார். ஷை சங்கத்தின் நான்காம் வருஷோத்ஸவம் சென்ற மேமீ செம்மையாய் நடந்தேறியதை அவர் அனுப்பிய ஓர் அறிக்கைப் பத்திரத்தினால் அறிந்துகொண்டு களிகூறுகின்றோம்.

நன்னூல் இலகு போதம்:—இரண்டு பாகங்கள்: இவை யாழ்ப்பாணம் நாவலர்கோட்டத்து மானிப்பாய் மகா-ா-ா-ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களால் செய்யப்பட்டன. பவணந்தி முனிவர் செய்த நன்னூலை மாணாக்கர்களுக்கு எளிதிற் கற்பிக்கவேண்டி, இவர் போதனாமுறையின் திறமையுடன் முனிவர் சூத்திரங்களில் ஒவ்வொன்றிற்கும் பதாந்துவயமும் பலவுரைகளையுந் தழுவித் தெளிந்த வுரையும், விஷய நுட்பங்களையும் பாகுபாட்டினையும் அடக்கிக்கொண்டிருக்கின்ற வினாவிடைகளும், செம்மையாய் விளங்கும்படி எழுதியிருக்கின்றார். எழுத்ததிகாரத்தின் இறுதியில் "பகுபத முடிபு" என்றோர் அத்தியாயமும், மாணாக்கர்களுக்கு மிகவும் உபயோகமான நான்கு அப்பியாசங்களும் காணப்படுகின்றன. இரண்டாவது பாகம் சொல்லதிகாரம். இதன் இறுதியில் சில முக்கியமான விலக்கணங் கூறிய உதாரணங்களும், பலவிதச் சொற்களின் நிலைகளும், வாக்கியாந்துவய விலக்கணமும் கூறப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் வித்தியா விலாகா டைரெக்டர் அவர்களால் உவந்தேற்றுக்கொள்ளப்பட்டது. இப்புத்தகங்களைத் தென்னிந்தியாவிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளில் உபயோகப்படுத்தலாம் என்பது எங்கள் அபிப்பிராயம். மாணாக்கர்களுக்கு மிகவும் பயன்தரக்கூடியதாக விருப்பதோடு, இப்புத்தகங்கள் உபாத்தியாயர்களுக்கும் மிகவும் உதவியாகும். சில வரிய கருத்துக்களும், ஆராய்ச்சியினைத் தூண்டும் அபிப்பிராயங்களும் இடையிடையே காணப்படுகின்றன. எழுத்துக்கள் தமக்கேற்பட்ட முறையாக வருதற்குக் காரணமும், அவைகளின் தொல்லை வடிவுகளும், நூதன வடிவுகளும், ஆகுபெயர் அன்மொழித்தொகை இயல்புகளும், மற்றும் பல கருத்துக்களும் காணப்படுகின்றன. மேலும் இப்புத்தகங்களின் அருமை பெருமைகளை யெடுத்துக் கூறின் விரியும். வித்தியார்த்திகள் இவைகளைப் பெற்றுப் படித்துக் களிகூறுவார்களென்று நம்புகிறோம். பத்திராதிபர்.